தி.மு.க. மீனவர் அணி ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

13- ஆம் பக்கத் தொடர்ச்சி

3) எஸ். ஆனந்தகுமார், செங்காட்டுப்பாளையம் அஞ்சல், தாராபுரம்-642201. திருப்பூர் மாவட்டம். 4) சி. ராமசாமி, மரவாபாளையம், வேங்கியபாளையம் அஞ்சல், தாராபுரம்-638703. திருப்பூர் மாவட்டம். 5) ஆர். சக்தி முருகன் தாளக்கரை, நல்லிமடம் அஞ்சல், தாராபுரம்-638706. திருப்பூர் மாவட்டம்.

வெள்ளக்கோவில் ஒன்றியம்

அமைப்பாளர் - எஸ். தங்கமுத்து 129.கோவில்பாளையம் மங்களபட்டி-அஞ்சல், முத்தூர்- 638105 திருப்பூர் மாவட்டம்

துணை அமைப்பாளர்கள் - 1) ராசு வள்ளியரச்சல் அஞ்சல், முத்தூர்- 638105 திருப்பூர் மாவட்டம் 2) எஸ். சேனாபதி கணபதிபாளையம் வள்ளியரச்சல்அஞ்சல், முத்தூர்-638105, திருப்பூர் மாவட்டம் 3) வி. துரை பழனிகவுண்டன் வலசு மேட்டுப்பாளையம் அஞ்சல், வெள்ளகோவில் திருப்பூர் மாவட்டம் 4) முத்துசாமி தாசவநாய்க்கன் பட்டி தாசவநாய்க்கன் பட்டிஅஞ்சல், வெள்ளகோவில் வழி-638111 திருப்பூர் மாவட்டம் 5) ராமசாமி இலக்கமநாய்க்கன் பட்டி இலக்கமநாய்க்கன் பட்டி அஞ்சல், வெள்ளகோவில்- 638111 திருப்பூர் மாவட்டம்

சென்னிமலை கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சி. சண்முகம் 34, புதுவலசு, கே.ஜி. வலசு அஞ்சல், சென்னிமலை வழி-638051.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். சுரேஷ் 11/8, தோப்புக்காடு, சாணார்பாளையம் அஞ்சல், சென்னிமலை வழி-638051. 2) சி. செந்தில்குமார் 2, சாணார்பாளையம் அஞ்சல், சென்னிமலை வழி-638051. 3) ஆர். சுப்பிரமணியம் வாய்க்கால்பாலம், பசுவபட்டி அஞ்சல், 4) எஸ். சேகர் கூரபாளையம், முகாசிப்பிடாரியூர் அஞ்சல், சென்னிமலை -638051. 5) சி. முருகன் நாடார் தெரு, புதுப்பாளையம், முருங்கத்தொழுவு அஞ்சல், சென்னிமலை-638051.

சென்னிமலை மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - வி. சண்முகம் 550, புதுவிநாயகர் வீதி, மேலப்பாளையம், ஈங்கூர் ரோடு, சென்னிமலை-638051.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. கார்த்திக் 2/4, தெற்கு ராமலிங்கபுரம், சென்னிமலை-638051. 2) வி. சண்முகசுந்தரம் 587, சர்க்கார் கிணறு வீதி, மேலப்பாளையம், சென்னிமலை-638051. 3) சி. பழனிசாமி 1/21ஏ, நாடார் தெரு, குப்பம்பாளையம், கொடுமணல், 4) ஏ. ஏகநாதன் 112/135, சரவணாநகர், ஊத்துக்குளி ரோடு, மேலப்பாளையம், 5) ஆறுமுகம் சிரகிரிவேலவன் நகர், மேலப்பாளையம், சென்னிமலை-638051.

மூலனூர் கிழக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - மா. அருள்பிரகாஷ் கவுண்டப்பகவுண்டனூர், மாலமேடு அஞ்சல், அரவக்குறிச்சி வழி, தாராபுரம் தாலுக்கா -639201, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) த. ரவிச்சந்திரன் நஞ்சைத்தலையூர், நஞ்சைத்தலையூர் அஞ்சல், சின்னதாராபுரம் வழி, தாராபுரம் தாலுக்கா -639202, திருப்பூர் மாவட்டம். 2) பா. கோபால்சாமி கரைவலசு, கருப்பன் வலசு அஞ்சல், வெள்ளகோவில் வழி, தாராபுரம் தாலுக்கா -638111 திருப்பூர் மாவட்டம். 3) சு. மூர்த்தி 33, மூலப்பாளையம், எரசினம்பாளையம் அஞ்சல், மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா , திருப்பூர் மாவட்டம். 4) செ. ரகுபதி நத்தப்பாளையம், நத்தப்பாளையம் அஞ்சல், மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா-638106. திருப்பூர் மாவட்டம். 5) மு. மாயவன் முளையாம்பூண்டி, ஆதிதிராவிடர் தெரு, முளையாம்பூண்டி அஞ்சல், வெள்ளக்கோவில் வழி, தாராபுரம் தாலுக்கா -638111, திருப்பூர் மாவட்டம்.

மூலனூர் மேற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - கே. கதிரவன் ரங்கபாளையம், தேர்பட்டி அஞ்சல், தாராபுரம் வட்டம் - 638 673 திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கிருஷ்ணகுமார் ரங்கபாளையம், தேர்பட்டி அஞ்சல், தாராபுரம் வட்டம் - 638 673 2) திருமலைசாமி பள்ளபாளையம், பகவான்கோவில் அஞ்சல், தாராபுரம் வட்டம் - 638 673 திருப்பூர் மாவட்டம். 3) காளிதாஸ் பள்ளபாளையம், பகவான்கோவில் அஞ்சல், தாராபுரம் வட்டம் - 638 673 திருப்பூர் மாவட்டம். 4) லட்சுமி கோனேரிபட்டி அஞ்சல், கொளிஞ்சிவாடி (வழி), தாராபுரம் வட்டம் - 638673 திருப்பூர் மாவட்டம். 5) சபரி எலுகாம்வலசு, பொன்னிவாடி அஞ்சல், கொளிஞ்சிவாடி (வழி), தாராபுரம் வட்டம் - 638 673 திருப்பூர் மாவட்டம்.

காங்கேயம் நகரம்

அமைப்பாளர் - எஸ். செல்வராஜ், 272-எ-3, புலிக்கல் மேடு, திருப்பூர் ரோடு, காங்கேயம் - 638 701, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) டி.எ. ஈஸ்வரன், 72,புலிக்கல் மேடு, திருப்பூர் ரோடு, காங்கேயம் - 638 701. திருப்பூர் மாவட்டம். 2) கே. அழகேசன், 29, கார்த்திகை நகர், திருப்பூர் ரோடு, காங்கேயம் - 638 701. திருப்பூர் மாவட்டம். 3) என். ராஜேந்திரன், 220/4, கார்த்திகை நகர், திருப்பூர் ரோடு, காங்கேயம் - 638 701, திருப்பூர் மாவட்டம். 4) எ.ராஜா, 154,எச்.எம். வீதி கோவை ரோடு, காங்கேயம்-638 701. திருப்பூர் மாவட்டம்.

வெள்ளக்கோவில் நகரம்

அமைப்பாளர் - எஸ்.ராசு சீரங்கராயக்கவுண்டன் வலசு, வெள்ளக்கோவில்-638111 திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ஆர்.திவாகர் 405,காமராஜபுரம் வெள்ளக்கோவில்-638111, திருப்பூர் மாவட்டம். 2) எம்.சசிக்குமார் 120எ, கரட்டுப்பாளையம் வெள்ளக்கோவில்-638111, திருப்பூர் மாவட்டம். 3) ஆர். விஸ்வநாதன் 209 எ2, பாரதி நகர், வெள்ளக்கோவில்-638111, திருப்பூர் மாவட்டம். 4) ஜி.கோபிநாத் 271, மணியக்காரர் பேட்டை, முத்தூர் ரோடு, வெள்ளக்கோவில்-638111, திருப்பூர் மாவட்டம். 5) ஆர்.ராசு 382, நாயக்கர் தெரு, மூலனூர் ரோடு, வெள்ளக்கோவில்-638111, திருப்பூர் மாவட்டம்.

தாராபுரம் நகரம்

அமைப்பாளர் - எஸ். இளங்கோ, 36, திருநீலகண்டர் தெரு, சின்னக்கடை வீதி, தாராபுரம்-638656, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். அபுபக்கர் சித்திக், 5/6, ஜமால் புதூர் தெரு, ஜின்னா மைதானம், தாராபுரம்-638656, திருப்பூர் மாவட்டம். 2) பி. தப்பீக் 28, ராஜவாய்க்கால், முஸ்லீம் தெரு, தாராபுரம்-638656, திருப்பூர் மாவட்டம். 3) கே. கேசவன், 81ஈ, நேரு நகர், சங்கர் மில் பின்புறம், தாராபுரம்-638656, திருப்பூர் மாவட்டம். 4) எஸ். கதிரேசன், 57, தேவேந்திரா தெரு, தாராபுரம்-638656, திருப்பூர் மாவட்டம். 5) ஆர். ஜெயபால் க.எண். 6. ஆர்.சி. கிருஸ்துவ சந்து, தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638656.

முத்தூர் பேரூர்

அமைப்பாளர் - நா. செல்வக்குமார் 2/5, சின்னமுத்தூர், முத்தூர் அஞ்சல், காங்கேயம் தாலுக்கா -638105. திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) செ. ரதீஷ் 2/4, சின்ன முத்தூர், முத்தூர் அஞ்சல், காங்கேயம் தாலுக்கா-638105. திருப்பூர் மாவட்டம். 2) செ. பாலகிருஷ்ணன், 95, பழனியாண்டவர்புரம், முத்தூர் அஞ்சல், காங்கேயம் தாலுக்கா -638105. திருப்பூர் மாவட்டம். 3) செ. அஜய், 2, தண்ணீர் பந்தல், முத்தூர் அஞ்சல், காங்கேயம் தாலுக்கா-638105. திருப்பூர் மாவட்டம்.

சென்னிமலை பேரூர்

அமைப்பாளர் - ஆர். முருகேசன், 3, காந்தி நகர், சென்னிமலை- 638 051

துணை அமைப்பாளர்கள் - 1) எம். முருகன், நால்வர் தெரு, சென்னிமலை- 638 051 2) எஸ். குமார், ஊத்துக்குளி ரோடு, சென்னிமலை- 638 051.

சின்னக்காம்பாளையம் பேரூர்

அமைப்பாளர் - ராமச்சந்திரன், எம்.ஜி.ஆர். நகர், செலாம்பாளையம்-638672. திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) அமல்ராஜ், ஆசிர்புரர், சின்னக்காம்பாளையம்-638657. திருப்பூர் மாவட்டம். 2) முருகேசன், சின்னக்காம்பாளையம்-638657, திருப்பூர் மாவட்டம். 3) பாலசுப்பிரமணி புது தெரு, சின்னக்காம்பா ளையம்-638657. திருப்பூர் மாவட்டம்.

கொளத்துப்பாளையம் பேரூர்

அமைப்பாளர் - பி. அய்யாசாமி புது தெரு, கரையூர், காளிபாளையம், தாராபுரம்-638661. திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) கே. செல்வன், 11, முத்துகவுண்டன்வலசு, ஆலாம்பாளையம் அஞ்சல், தாராபுரம்-638661. திருப்பூர் மாவட்டம். 2) டி. சக்திவேல் 23, முத்துகவுண்டன்வலசு, ஆலாம்பாளையம் அஞ்சல், தாராபுரம்-638661. திருப்பூர் மாவட்டம். 3) என். நந்தகுமார் 14, கிருஷ்ணாபுரம், கொளத்துப்பாளையம், தாராபுரம்-638661. திருப்பூர் மாவட்டம்.

கன்னிவாடி பேரூர்

அமைப்பாளர் - டி. அர்ச்சுணன் 1, எரச்சப்பாடி பதி, எரச்சப்பாடி அஞ்சல், சின்னதாராபுரம் (வழி), தாராபுரம் (வ), திருப்பூர் மாவட்டம் - 639 202.

துணை அமைப்பாளர்கள் - 1) டி. ராஜேந்திரன் 42, எரச்சப்பாடி பதி, எரச்சப்பாடி அஞ்சல், சின்னதாராபுரம் (வழி), தாராபுரம் (வ), திருப்பூர் மாவட்டம் - 639 202 2) எஸ். கரிகாலன் 17, மணலூர் , ஒரத்துப்பாளையம் அஞ்சல், மூலனூர் (வழி), தாராபுரம் தாலுக்கா திருப்பூர் மாவட்டம் - 638 106 3) எஸ். பாலசுப்பிரமணியம் 7, ஒரத்துப்பாளையம் அஞ்சல், மூலனூர் (வழி), தாராபுரம் தாலுக்கா திருப்பூர் மாவட்டம் - 638 106

குறிப்பு : தாராபுரம் கிழக்கு, தாராபுரம் மேற்கு ஆகிய ஒன்றியங்கள், மற்றும் ருத்திராவதி , மூலனூர் ஆகிய பேரூர் பின்னர் அறிவிக்கப்படும்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-08-2025.

டாக்டர் ஏ.ஜோசப் ஸ்டாலின்
செயலாளர்
தி.மு.க. மீனவர் அணி.

கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 03.03.1935

மறைவு: 07.08.2025

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடியும்
தொ.மு.ச.பேரவையின் முன்னாள் துணைத் தலைவருமான

இரெ.கோவிந்தசாமி அவர்கள்

07.08.2025 வியாழக்கிழமை காலை 8.15 மணியளவில்
இயற்கை எய்தினார்

அவரது உடல் ரமேஷ் நகர் 3வது குறுக்குத் தெரு மேற்கு தாம்பரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது

அன்னாரின் இறுதி ஊர்வலம் 08.08.2025 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டது என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆழ்ந்த வருத்தங்களுடன்...

மகன்கள் - மகள்:

கோ.திருமாவளவன், கோ.நன்மாறன் (அரசு வழக்கறிஞர்- சென்னை உயர்நீதிமன்றம்)

கோ.இளங்கோ, கோ.கோப்பெருந்தேவி

மற்றும் குடும்பத்தினர்கள், உறவினர்கள் - நண்பர்கள்

இலத்தேரி ரெயில்வே கிராசிங்கில் மேம்பாலப் பணி அமைக்கப்படுமா?

காட்பாடி ரெயில் நிலைய மறு மேம்பாட்டுப் பணிகள் விரைவுபடுத்தப்படுமா?

மக்களவையில் - டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, ஆக.9- இலத்தேரி ரெயில்வே லெவல் கிராசிங்கில் ரெயில்வே மேம்பாலம்/சுரங்க பாலம் அமைப்பது, காட்பாடி ரெயில் நிலைய மறுமேம்பாடு பணிகளின் தற்போதைய நிலை குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

சமீபத்திய ரெயில்வே கிராசிங் விபத்து சம்பவங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் இன்டர்லாக் செய்யப்படாத லெவல் கிராசிங்கு களில் குறிப்பாக வேலூர் மக்களவைத் தொகுதியில் காட்பாடி அருகே உள்ள இலத்தேரி ரெயில் நிலைய த்தில் உள்ள லெவல் கிராசிங் எண். 57 (LC57) அடிக்கடி ரெயில் போக்குவரத்து, அதிகரித்து வரும் வாகனப் போக்குவரத்து, நீண்ட நேர மூடல் மற்றும் விபத்து அபாயம் காரணமாக பாதுகாப்பு அபாயங்களை ஏற்படுத்துகிறது என்பதை ஒன்றிய அரசு உணர்ந்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?

ரெயில்வே மேம்பாலம் அல்லது ரெயில்வே சுரங்க பாலம் அமைப்பதன் மூலம் LC57 ஐ அகற்ற ஏதேனும் திட்டம் உள்ளதா? ஆம் எனில், அதன் விவரங்கள் தருக? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் யாவை?

NH75 இல் உள்ள காட்பாடி சந்திப்பில் உள்ள சாலை ரயில் பாலம் திட்டத்தின் நிலை, ஒதுக்கப்பட்ட நிதி, டெண்டர் இறுதி செய்தல், எதிர்பார்க்கப்படும் நிறைவு தேதி குறித்தும் மற்றும் காட்பாடி நிலைய மறு மேம்பாடு மற்றும் வேலூர் பைபாஸ் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பு பணி தற்போதைய நிலை என்ன?

தேசிய ரெயில்வே நவீனமயமாக்கல் மற்றும் பாதுகாப்பு நோக்கங்களுக்கு ஏற்ப இந்தத் திட்டங்களை விரைவு படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் ரெயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:-

ரெயில்வே லெவல் கிராசிங்குகளுக்கு (LCs) பதிலாக சாலை மேம்பாலம் (ROB)/சாலைக்கு அடியில் பாலம் (RUB) பணிகளை அனுமதிப்பது இந்திய ரயில்வேயின் தொடர்ச்சியான செயல்முறையாகும். இத்தகைய பணிகள் ரயில் செயல்பாடுகளில் பாதுகாப்பு, ரயில்களின் இயக்கம் மற்றும் சாலை பயனர்களுக்கான தாக்கம் மற்றும் சாத்தியக்கூறு போன்றவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுகின்றன. அதன் தாக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத்தில் ரூ.4,669 கோடி செலவில், இவை திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

சென்னை ரெயில்வே டிவிஷன் அரக்கோணம்-ஜோலார்பேட்டை பிரிவில் உள்ள லத்தேரி யார்டில் கி.மீ 136,900-137,000 இல் உள்ள லெவல் கிராசிங் (LC) எண். 57, கேட் சிக்னல்களால் (இடைபூட்டு) பாதுகாக்கப்படுகிறது. இந்த லெவல் கிராசிங்கிற்கு பதிலாக சாலை மேம்பாலம் கட்டும் பணி செலவு பகிர்வு அடிப்படையில் அனுமதிக்கப்பட்டது. பின்னர், இருபுறமும் அடர்த்தியான மக்கள் தொகை காரணமாக இந்த ROB இன் அணுகுமுறைகளை நிர்மாணிப்பது சாத்தியமில்லை என்று கண்டறியப்பட்டது.

அதன் காரணமாக இந்த பணி மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும், உயரம் குறைந்த சுரங்கப் பாதை (LHS) கட்டுமானம் சாத்தியமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதன்படி, சுரங்கப்பாதை கட்டுமானப் பணி சமீபத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அமிர்த பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் மறுசீரமைப்பிற்காக காட்பாடி ரெயில் நிலையத்தின் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. RPF மற்றும் சாரணர் கட்டிடத்தின் கட்டமைப்பு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. புறப்பாடு முனையத்தின் அடித்தளம், பல நிலை கார் பார்க்கிங், பார்சல் அலுவலகம், பணியாளர்கள் குடியிருப்புகளின் கட்டமைப்பு பணிகள் மற்றும் RPF பாராக் மற்றும் சாரணர் கட்டிடத்தின் இறுதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

NH75 இல் காட்பாடி சந்திப்பின் வழியாகச் செல்லும் தற்போதைய இருவழி ROBக்கு அருகில் கூடுதலாக இருவழி ROB அமைக்கும் பணியை சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் / இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் மேற்கொண்டுள்ளது. பொது ஏற்பாடு வரைபட ஒப்புதல் அளிக்கப்பட்டு வடிவமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காட்பாடி சந்திப்பு நிலையத்தின் முதன்மைத் திட்டம், நிலையத்தின் தெற்குப் பகுதியில் உள்ள தற்போதுள்ள பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் ஸ்கைவாக் மூலம் புறப்பாடு மற்றும் வருகை முனையக் கட்டிடத்துடன் சாலை மேம்பாலம் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வேலூர் பைபாஸ் திட்டத்தில், சென்னை டிவிஷன் அரக்கோணம்ஜோலார்பேட்டை பிரிவில் இலத்தேரி மற்றும் விருஞ்சிபுரம் நிலையங்களுக்கு இடையில் ரயில்வே கி.மீ 137,600700 இல் ஒரு ROB மற்றும் திருச்சிராப்பள்ளி டிவிஷன் விழுப்புரம் காட்பாடி பிரிவில் உள்ள கனியம்பாடி மற்றும் பென்னாத்தூர் நிலையங்களுக்கு இடையில் 140,800900ல் மற்றொரு ROB ஆகியவை அடங்கும். இந்தப் பணிகள் தமிழ்நாடு அரசின் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவால் ஒற்றை சாளர அடிப்படையில் செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறி யுள்ளார்.